# மே – 26 –சனி

### புனித பிலிப்பு நேரி

### ஆண்டவர் விண்ணகத்தினின்று மானிடரை உற்றுநோக்குகின்றார்: திபா. 14:2

## முதல் வாசகம் : யாக்கோபு 5 : 13 – 20

சகோதர சகோதரிகளே,உங்களுள் யாரேனும் துன்புற்றால் இறைவேண்டல் செய்யட்டும் மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும்.உங்களுள் யாரேனும் நோயுற்றி ருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய்பூசி இறைவனிடம் வேண்டுவார்கள்.நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பிவிடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார்.ஆகவே ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்துகொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். அப்பொழுது குணமடைவீர்கள். நேர்மையாளருடைய வல்லமைமிக்க மன்றாட்டு பயன்விளைவிக்கும்.எலியா நம்மைப் போன்ற எளிமையான மனிதர்தாம். அவர் மழைபெய்யக்கூடாது என்று உருக்கமாக இறைவனிடம் வேண்டினார் மூன்று ஆண்டு ஆறுமாதம் மழையில்லாது போயிற்று.மீண்டும் அவர் இறைவனிடம் வேண்டினார் வானம்பொழிந்தது, நிலம்விளைந்தது. என் சகோதர சகோதரிகளே, உங்களுள் ஒருவர் உண்மையைவிட்டு நெறிதவறி அலையும்போது, வேறொருவர் அவரை மனந்திரும்பச் செய்தால், தவறான நெறியிலிருந்து மனந்திருப்புகிறவர் அவரை அழிவிலிருந்து மீட்பார் என்பதையும் திரளான பாவங்களைப் போக்குவார் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

**பதில்பாடல் :** தூபம்போல் என் மன்றாட்டு உம் திருமுன் ஏற்கப்படுவதாக.

## நற்செய்தி : மாற்கு 10 : 13 - 16

அக்காலத்தில் சிறுபிள்ளைகளை இயேசு தொடவேண்டுமென்று அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டுவந்தனர். சீடரோ அவர்களை அதட்டினர். இயேசு இதைக்கண்டு, கோபம்கொண்டு, ”சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. இறையாட்சியைச் சிறுபிள்ளையைப்போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். பிறகு அவர் அவர்களை அரவணைத்து, தம்கைகளை அவர்கள்மீது வைத்து ஆசி வழங்கினார்.

**தியானம்:** இன்றைய முதல் வாசகமானது ஆண்டவர் எங்கள் கூட எப்பொழுதும் இருக்கின்றார், எவ்வாறான சுமைகளாக இருந்தாலும் என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். யார் எமக்கு உதவி செய்வார்? யார் எமக்கு விதலை தருவார் என்று கலங்கவேண்டாம் என்று கூறுவதைப் பார்க்கின்றோம். “கலங்காதே திகையாதே நான் என்றும் உன் கூடவே இருக்கின்றேன்” என்ற அவரது உயிருள்ள வார்த்தையை ஏற்று வாழாததால் தான் சிறு சிறு காரியங்களுக்குக் கூட மனங்குளம்பிப்போய் விடுகின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் பார்ப்பதுபோல் நாங்கள் சிறுவர்களைப் போல் மாறாவிட்டால் விண்ணரசில் நுழைய முடியாது என்று தெளிவாக கூறப்பட்டிருப்பதைப் பார்க்கின்றோம். (மாற். 10:15) ஏனெனில் சிறுவர்களுடைய உள்ளத்திலோ கள்ளம் கபடம் ஒன்றும் காணப்படமாட்டாது. அவர்கள் எப்பொழுதும் நல்லதையே செய்வார்கள். இன்று நாங்கள் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி வெளிவேடமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அவ்வாறு வாழாது மற்றவர்களுக்காக வாழாமல் இறைவன் சித்தத்திற்கேற்ப வாழ அழைக்கப்படுகின்றோம். எனவே நாங்கள் விண்ணரசில் இறைவனோடு ஒன்றித்திருக்க எம்மைத் தூய்மைப் படுத்துவோம். எமது மனங்களை சிறுவர்களின் உள்ளங்களைப் போன்று மாற்றுவோம், விசுவாசத்தில் உறுதி பெறுவோம்.